{සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது / All Rights Reserved / සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது }

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித்திணைக்களம்- வடமத்திய மாகாணம்
Department of Education – North Central Province

தரம் - 10 | மூன்றாம் தவணை பரீட்சை - 2025 | நேரம் : 2 மணி 10 நிமிடம்

பாடம் : இஸ்லாம் | வினாத்தாள்: | சுட்டெண் -

## புள்ளித் திட்டம்

### இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 1 | **11** | 3 | **21** | 2 | **31** | 4 |
| **02** | 3 | **12** | 2 | **22** | 3 | **32** | 2 |
| **03** | 3 | **13** | 2 | **23** | 1 | **33** | 3 |
| **04** | 1 | **14** | 3 | **24** | 2 | **34** | 1 |
| **05** | 2 | **15** | 4 | **25** | 4 | **35** | 3 |
| **06** | 4 | **16** | 1 | **26** | 4 | **36** | 2 |
| **07** | 1 | **17** | 3 | **27** | 2 | **37** | 1 |
| **08** | 2 | **18** | 1 | **28** | All | **38** | 3 |
| **09** | 1 | **19** | 2 | **29** | 4 | **39** | 2 |
| **10** | 3 | **20** | 2 | **30** | 2 | **40** | 3 |

## இஸ்லாம் II

**(01)**

1) பயிர்ச் செய்கை , மந்தை வளர்ப்பு
2) வுழு, குளிப்பு (உஸ்ல்)
3) விறகு பொறுக்குதல், உணவு சமைத்தல், நீர் சுமந்து வருதல், பால் கறத்தல், நூல் சுற்றுதல், பிள்ளை பராமரித்தல் *(போன்ற ஏதேனும் இரண்டு)*
4) மதீனா சாசனம் - மதீனா, மகா சாசனம் - இங்கிலாந்து
5) ஜாஇஸ் - அனுமதிகப்பட்டது, மக்ரூஹ் - வெறுக்கத்தக்கது
6) தஹிய்யதுல் மஸ்ஜித், பெருநாள் தொழுகை, ழுஹா தொழுகை *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*
7) பேணுதல் - வரஉ, பற்றற்ற வாழ்வு - ஸுஹ்த்
8) அபூலஹப், அபூஜஹ்ல் *(அல்லது இவர்கள் போன்ற எவரேனும் பொருத்தமான இருவர்)*
9) இப்திராஷ், தவர்ருக்.
10) அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), கதீஜா (ரழி) *(அல்லது இவர்கள் போன்ற எவரேனும் பொருத்தமான இருவர்)*

(2x10 =20 புள்ளிகள்)

**(02)**

i. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களது ஸஹாபாக்களும் நடந்த வழிமுறையில் நடக்கக் கூடியவர்களைக் குறித்து நிற்கிறது.

ii. உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்துவது, அல்லாஹ்வுடனான நெருக்கத்தை அதிகரிப்பது, பாவமான காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழப் பயிற்றுவிப்பது, தியாகம், பொறுமை, பிறர் நலன்பேணல் போன்ற நற்பண்புகளை வளர்ப்பது, இறைதிருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைப்பது. *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

iii. **தயம்மும் :** தயம்மும் என்பது கடமையான வுழூவுக்காகவோ, குளிப்புக்காகவோ நீரைப் பயன்படுத்த முடியாதபோது அதற்குப் பதிலாகச் சுத்தமான மண்ணைப் பயன்படுத்தி முகம் மற்றும் இரு கைகளை மஸ்ஹு செய்வதைக் (தடவுவதை) குறிக்கும். நோய் காரணமாகவோ, நீரின்மை காரணமாகவோ, நீரைப்பயன்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அல்லது குடிப்பதற்கு மாத்திரம் நீர் இருக்கும் நிலையிலோ தயம்மும் செய்துகொண்டு தொழுகை முதலிய இபாதத்களை நிறைவேற்ற முடியும்.

**ஜபீரத் :** ஜபீரத் என்பது உடலுறுப்புக்களில் காயம் ஏற்பட்டதற்காகப் போடப்படும் கட்டு (பெண்டேஜ்) அல்லது பிளாஸ்டரைக் குறிக்கும். வுழூ செய்த நிலையில், வுழூவுடைய உறுப்புகளில் இக்கட்டு போடப்பட்டிருந்தால் அதனைக் கழுவுவதற்குப் பதிலாகத் தயம்மும் செய்துகொள்ளலாம். இதன்போது வுழூவின் ஏனைய உறுப்புக்களை நீரைப் பயன்படுத்தி வுழூ செய்து கொள்ளவேண்டும்.

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. ஒரு மு.்.மினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால் அவனிடம் பொய்யும் நாணயமின்மையும் இருக்க மாட்டாது." (அஹ்மத்)

"அடுத்தவர்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருட்கள் காணாமல் போக ஆரம்பிக்கும் நாட்கள் வந்துவிட்டால் மறுமைநாள் வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்" (புஹாரி)

"மன மகிழ்வோடு தன் எஜமானனின் ஆணையை நிறைவேற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர் தர்மம் செய்யக்கூடியவர்களுள் ஒருவராவார்" (புஹாரி) *(இவை போன்ற பொருத்தமான ஒரு ஹதீஸ்)*

ii. **நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூ.்.** எனும் தீமையை ஏவும் உள்ளம். இங்கு நன்மைக்கான தூண்டுதல் இருக்காது. இச்சைகளுக்கும் ஷைத்தானுக்கும் அடிமைப்பட்ட ஒரு நிலை காணப்படும்.

**நப்ஸுல் லவ்வாமா** எனும் தன்னையே நொந்துகொள்ளும் உள்ளம். இங்கு இச்சைகளுக்கு எதிரான போராட்டம் இருக்கும். அதேநேரம் இச்சைகள் மிகைத்து பாவங்களில் ஈடுபட்டுவிட்டால் உடனே அதற்காக அந்த மனம் வருந்தும். தன்னையே குறைகூறும். தன் நிலையறிந்து கைசேதப்படும்.

**நப்ஸுல் முத்மஇன்னா** எனும் அமைதியடைந்த உள்ளம். அது பதற்றம், தடுமாற்றம் இன்றி அமைதியான நிலையில் காணப்படும். தீமைக்கான தூண்டுதல் இங்கு மிகக் குறைவாகவே இருக்கும். நன்மைக்கான தூண்டுதலே மிகைத்துக் காணப்படும். இந்த மூன்றாவது நிலையான தீமைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக உள்ளத்தை அமைத்துக் கொள்வதே தஸ்கியா மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

iii. செய்வதை விட்டு விட்டு இறைவனை முழுமையாக சார்ந்து விடுவதாகும். தவ்பா என்றால் மீளுதல், திரும்புதல் என்பது கருத்தாகும். பரிபாஷையில் ஒரு மனிதன் இரகசியமாகவும் பரகசியமாகவும் இறைவன் வெறுக்கக் கூடியவற்றிலிருந்து அவன் விரும்பக்கூடிய விடயங்களின் பால் திரும்பிவிடுதல் என்பதாகும். அதற்கான நிபந்தனைகள்:

- இறைவனுக்கு என்ற தூய எண்ணத்தோடு தவ்பா செய்தல்.
- தான் செய்த பாவங்களை விட்டுவிட்டு அவற்றை விட்டும் முற்றுமுழுதாக நீங்குதல்.
- தான் செய்த பாவங்களை எண்ணி வருந்தி அதற்காகக் கைசேதப்படல்.
- செய்த பாவம் சக மனிதனோடு தொடர்புபட்டிருந்தால் அவனிடம்
- மன்னிப்பு வேண்டிய நிலையில் இறைவனிடம் நெருங்குதல்.

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. தர்தீப் நுஸுல் - அல்குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கு , தர்தீப் திலாவத் - அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு

ii. இஜ்மாஉவை ஏற்றுப் பின்பற்றும் போது கிட்டும் பயன்கள்

1. சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல்.
2. சமூகத்தில் கட்டுப்பாடு குலையாதிருத்தல்.
3. பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைத்தல்

iii. இஸ்லாமிய வழக்கில் கியாஸ் என்பது "அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தீர்வு சொல்லப்படாத ஒரு புதிய பிரச்சினை தோன்றினால் அதனைக் குர்ஆன், ஸுன்னாவில் தீர்வு சொல்லப்பட்ட பிரச்ச்னையோடு ஒப்புநோக்கி அதன் தீர்வை புதிய பிரச்சினைக்கும் பயன்படுத்துவதைக்" குறிக்கும்.

**அல் அஸ்ல்**:- ஏற்கனவே தீர்வு சொல்லப்பட்டுள்ள பிரச்சினையே இவ்வாறு அழைக்கப்படுகிறது.
**அல்பரஉ**:- அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ, இஜ்மாஉவிலோ தீர்வு முன்வைக்கப்படாத, தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினையே அல்பரஉ ஆகும்.
**இல்லத்**:- இரு பிரச்சினைகளுக்கும் இடையில் அவதானிக்கப்படும் பொதுப்பண்பு பொதுக்காரணிதான் இல்லத் ஆகும்.
**ஹுக்ம்**:- அல்குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வே இப்பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது.

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. "அவன்தான் உங்களுக்குப் பூமியை (நீங்கள் வசிப்பதற்கு) வசதியாக ஆக்கிவைத்தான். ஆகவே பல கோணங்களிலும் சென்று அவன் (உங்களுக்கு) அளித்திருப்பவைகளைப் புசித்துக் கொண்டிருங்கள்." (67:15)
"(ஜும்ஆத்) தொழுகை முடிந்ததும் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத்தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்" (62:10)
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "ஒருவர் தொடர்ந்து யாசகம் கேட்டு வந்தால் மறுமையில் முகத்தில் சதையில்லாத நிலையிலே வருவான்"(புஹாரி, முஸ்லிம்)
நபி (ஸல்) அவர்கள் "நிச்சயமாக அல்லாஹ் தொழில் புரியும் விசுவாசியை நேசிக்கின்றான் என்றார்கள்" (தபரானி) *(இவை போன்ற ஏதேனும் ஒரு பொருத்தமான அல்குர்ஆன் வசனம் அல்லது ஹதீஸ்)*

ii. தெய்வீகத் தன்மை, சமூகத்தினுள் ஏற்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சீர் செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்கும் இடையே இணக்கம் காணல், ஆத்மீகத் தேவை லௌகீகத் தேவை ஆகிய இரண்டையும் சமகாலத்தில் கவனத்திற் கொள்ளல், எவருக்கும் அநீதி நிகழாமை, நெகிழ்வுத் தன்மை*(ஏதேனும் மூன்று)*

iii. வியாபாரத்தின்போது வாங்குவோரும் விற்போரும் இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணி செயற்படும் போது ஏற்படும் நலன்களில சில:
1. அவர்களது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை வணக்கமாகிவிடும்.
2. வாங்குவோர் விற்போருக்கிடையில் உறவு பேணப்படும்.
3. வியாபாரம் ஸ்திரத் தன்மையை அடையும்.
4. வீண் குற்றச் சாட்டுகளில் இருந்து பாதுகாப்புப் பெறப்படும்.
5. ஹராமான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மீட்சி கிடைக்கும்

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பினர். கழுத்தைத் திருகினர். ஒட்டகத்தின் அழுகிய குடலை ஸுஜூதில் இருக்கும்போது மாலையாக இட்டனர். முதலில் சிறு கற்களால் அடித்தார்கள். பின்னர் காயப்பட அடிக்கத் தொடங்கினார்கள். மூன்று ஆண்டுகள் ஷிஃபு அபீதாலிப் பள்ளத்தாக்கில் அடைத்து சமூக பகிஷ்கரிப்பு செய்தனர். *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

ii. நபி (ஸல்) அவர்கள் உலகின் இறுதித் தூதுவராக இருந்தமையும் அவருக்குப் பின்னர் வேறு தூதுவர்கள் வராமையும்.
அவரை ஏற்று தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொண்ட மக்கள் அவரது காலம் முதல் இன்று வரையும் இருந்து வருகின்றமை.
அவரது வரலாறு மிகச் சரியாக எழுதப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளமை.
அவரது வரலாறு பற்றிய நூல்கள், பொதுவாக எல்லா மொழிகளிலும் முஸ்லிம்களால் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவர்களாலும் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ளமை. *(போன்ற ஏதேனும் பொருத்தமான மூன்று)*

iii. உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவத்துக்கான உரிமை, தனி மனித சுதந்திரத்துக்கான உரிமை, நீதி பெறுவதற்கான உரிமை, கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை. சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உரிமை, மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை *(போன்ற பொருத்தமான ஐந்து உரிமைகள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 77-79ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 84,85ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 104-106ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 131,132ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)